සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

## புவியியல் - භූගෝල විද්‍යාව

தரம் : **9** நேரம்: 2 மணித்தியாலம்

| பெயர் /சுட்டெண்: |
|---|

**பகுதி** I

♦ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

♦ இலக்கம் 1-5 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான சொற்களை அடைப்பினுள்ளிருந்து தெரிவு செய்து இடைவெளி நிரப்புக.

1. ஆசியாவை ஐரோப்பாவில் இருந்து பிரிக்கும் எல்லை ………………………… மலைத்தொடராகும்
( இமயம் / யூரல் /இந்துகுஸ்தான் )

2. ஆசியா கண்டத்திற்குறிய ……………………….. அளவில் சிறிய தீவுகளுக்கு உதாரணமாகும்.
( ஜப்பான் தீவு / இந்தோனேசியா தீவு / அந்தமான் தீவு )

3. சனத்தொகையில் 100 பெண்களுக்கு இருக்கும் ஆண்களின் எண்ணிக்கையை குறிப்பிடுவது ……….
( பிறப்பு / இறப்பு / பால் விகிதம் )

4. உலகிலேயே …………………………… வழங்கும் பிரதான நாடு பாகிஸ்தான் ஆகும்.
( நெல் / பதப்படுத்தாத பருத்தி / கோதுமை )

5. விவசாயமல்லாத நடவடிக்கையில் ஈடுபடும் மக்கள் அதிகமாக வாழும் குடியிருப்பு …………………. குடியிருப்பு எனப்படும்.
( கிராம / நகர / சந்தி )

♦ இலக்கம் 6-10 வரையுள்ள வினாக்களுக்கு சரியாயின் (✓) அடையாளத்தையும் பிழையாயின் (✗) அடையாளத்தையும் அடைப்புக்குள் இடுக.

6. இலங்கையின் தாவர வலயங்கள், மழைவீழ்ச்சி, வெப்பநிலை ஆகிய காலநிலை காரணிகள் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. ( )

7. வளவ கங்கையை மறித்து மின்னேரிய நீர்தேக்கம் கட்டப்பட்டுள்ளது. ( )

8. குறிப்பிட்ட ஓர் இடத்தின் குறுகிய காலப்பகுதியில் நிலவும் வளிமண்டல நிலமை காலநிலை எனப்படும். ( )

9. இலங்கையில் தென்மேல் பருவக்காற்று செயற்படுவது மே தொடக்கம் செப்டம்பர் வரையாகும். ( )

10. இலங்கையின் சனத்தொகையில் அதிகமானோர் ஈரவலயத்திலேயே வாழ்கின்றனர் ( )

♦ இலக்கம் 11 - 15 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

11. ஜப்பானில் காணப்படும் மோட்டார் வாகன உற்பத்தியில் முன்னிலையில் இருக்கும் நிறுவனம் எது?

1.நிசான் 2.ஹொன்டா 3.யமஹா 4.டொயாட்டா

12. இலங்கையில் மாதாந்த தலா வருமானம் அதிகமாக பெறும் மாவட்டம் யாது?

1.கம்பஹ 2.களுத்துறை
3.குருனாகல் 4.கொழும்பு

13. இலங்கையில் நீர்பாசணத் தொகுதி அதிகமாக காணப்படும் காலநிலைய வலயம்.

1.வரண்டவலயம் 2.ஈரவலயம்
3.கரையோரவலயம் 4.மலைநாட்டு நிலத்தோற்றம்

14. பின்வரும் நாடுகளுள் மொங்கோலைட் மனித சமூகம் அதிகமாக வாழும் நாடு எது?

1.இலங்கை 2.இந்தியா
3.தென்கொரியா 4.ஈரான்

15. இலங்கையின் டெல்டா இலட்சணத்தை காணக்கூடிய நதிகள் இரண்டை காட்டக்கூடிய விடை.

1.மகாவலி கங்கையும் கல்ஓயாவும் 2. மகாவலி கங்கையும் கலாஓயாவும்
2.களனிகங்கையும் வளவகங்கையும் 4.ஜின்கங்கையும் நில்வளா கங்கையும்

♦ **கீழே 'அ'நிரலில் நதிகளும் 'ஆ' நிரலில் அவை சென்றடையும் கடல் மற்றும் சமுத்திரங்களும் காட்டப்பட்டுள்ளன அவற்றை சரியாக பொருத்துக.**


| அ | ஆ |
|---|---|
| 16. யென்சி, லினா | A. இந்து சமுத்திரம் |
| 17. சமூர், குவாங்கோ | B. ஆட்டிக் சமுத்திரம் |
| 18. இந்து, மிகொங் | C. பசுபிக் சமுத்திரம் |
| 19. யூப்டடீஸ், தைகிரிஸ் | D. ஏரல் கடல் |
| 20. சர்டேரியா, அமுடேரியா | E. பாரசிகக் குடா |

(20 X 2 = 40 புள்ளிகள்)

**பகுதி II**

முதல் வினா உற்பட ஐந்து வினாக்களுக்கு விடைத் தருக.

01.




அ).1. மேலே ஆசியப்படத்தில் A எழுத்தால் காட்டப்படும் மலைத்தொடரையும் B எழுத்தால் காட்டப்படும் கடலையும் பெயரிடுக. (புள்ளி 2)

2. C எழுத்தால் காட்டப்படும் நதியையும் D எழுத்தால் காட்டப்படும் பாலைவனத்தையும் பெயரிடுக. (புள்ளி 2)

3. E எழுத்தால் காட்டப்படும் தீவை பெயரிடுக. (புள்ளி 1)

4. அதிக சனத்தொகையை கொண்ட சீனாவை காட்டும் எழுத்து எது? (புள்ளி 1)

5. மலாக்கா நீரிணையை காட்டும் எழுத்து எது? (புள்ளி 1)

6. H எழுத்தால் காட்டப்படும் வலயத்தை பெயரிடுக. (புள்ளி 1)


7. J எழுத்தால் காட்டப்பட்டுள்ள தீவில் காணக்கூடிய காலநிலை வகை எது?. (புள்ளி 1)

ஆ) ஆசியாக் கண்டத்தில் காணக்கூடிய பின்வரும் இடவிளக்கவியல் நிலத்தோற்றத்திற்கு ஒவ்வொரு உதாரணம் தருக.

1. ஏரி 2. மேட்டு நிலம் 3. சமவெளி (புள்ளி 3)

இ) ஆசியாவின் சார்பமைவிடத்தை பின்வரும் திசைகளுக்கு ஏற்ப எழுதிக் காட்டுக.

- வடக்கு
- தெற்கு
- மேற்கு
- கிழக்கு (புள்ளி 4)




02. 1. படத்தில் இலக்கம் 1,2,3 இனால் காட்டப்படும் தரைத்தோற்றப் பிரிவுகளை குறிப்பிடுக. (புள்ளி 3)

2. படத்தில் A,B,C,D இனால் காட்டப்படும் மலைத்தொடர்களைப் பெயரிடுக. (புள்ளி 4)

3. படத்தில் E,F இனால் காட்டப்படும் மேட்டு நிலங்களைப் பெயரிடுக. (புள்ளி 4)


03. இலங்கையின் இயற்கைத்தாவர வலயங்களுக்கேற்ப பின்வரும் அட்டவணையை பூர்த்தி செய்க.

| இயற்கை தாவர வலயங்கள் | பரவியுள்ள பிரதேசம் | தாவரங்களின் விஷேட இலட்சணம் |
|---|---|---|
| தாழ் நில உலர் கலப்பு காடுகள் | 1…………………………<br>2………………………… | 6……………………………<br>7…………………………… |
| உலர் கலப்பு காடுகள் | 3……………………………<br>4…………………………… | 8……………………………<br>9…………………………… |
| மலைநாட்டு ஈர வலயம் | 5………………………… | 10…………………………….<br>11……………………………. |

(புள்ளி 11)

04. 1. இலங்கையில் காணப்படும் சுதந்திர வர்த்தக வலயங்கள் மூன்றை குறிப்பிடுக. (புள்ளி 3)

2. இலங்கையின் பொருளாதார செயற்பாடுகளுக்கு அமைய பின்வரும் அட்டவணையை பூரணப்படுத்துக.






(புள்ளி 8)

05. 1. இலங்கையின் அதிக சனத்தொகை மற்றும் குறைந்த சனத்தொகை கொண்ட மாவட்டங்களை முறையே பெயரிடுக. (புள்ளி 2)

2. நீர் மேலே குறிப்பிட்ட அதிக சனத்தொகை மற்றும் குறைந்த சனத்தொகையை கொண்டமைக்கான காரணங்களை குறிப்பிடுக. (புள்ளி 4)

3. இலங்கையில் இனங்களின் அடிப்படையிலான சனத்தொகை கட்டமைப்பு கீழே காட்டப்பட்டுள்ளன.




அ) இன அடிப்படையில் அதிகமானோர்……………………


ஆ) இலங்கையின் சோனக சமூகத்தினர் …………………… ஆகும்.

இ) சனத்தொகை விகிதத்திற்கமைய 11.2% காணப்படுவது ………………… இனமாகும்.

ஈ) சமய அடிப்படையில் அதிக மக்கள் வாழ்வது ……………….

உ) சமய அடிப்படையில் 9.7% இனம் காணப்படுவது …………………… (புள்ளி 5)

06. தரப்பட்டுள்ள தரவுகளை பயன்படுத்தி குறுகெழுத்து சட்டகத்தை பூரணப்படுத்துக.




**மேலிருந்துகீழ்**

1.2017 இல் ஆசியாவில் அதிக சனசெறிவு கொண்ட நாடுகளுள் ஒன்பதாம் இடத்தில் உள்ள நாடு.
2.நீண்ட கால வானிலை நிலமை
3.ஆட்டிக் சமுத்திரத்தில் கலக்கும் நதி ஒன்று
4.மத்திய மலை நாட்டில் உள்ள மேட்டுநிலம் ஒன்று.
5.யப்பானின் பிரதான மோட்டார் வாகன உற்பத்தி நிறுவனம் ஒன்று.

**இடமிருந்து வலம்**

6. இது மாலை மழை எனவும் அழைக்கப்படும்.
7. பாகிஸ்தானில் சோளம், பார்லி என்பன பயிர் இடப்படும் பருவம்
4. காலநிலை மூலகம் ஒன்று.
9. தென் மாகாணத்தில் உள்ள மாவட்டம் ஒன்று.
10. கரையோர பிரதேசத்தில் காணப்படும் தாவர வகை ஒன்று.

(புள்ளி 11)

07. 1. 1: 50000 மெற்றிக் தேசப்படத்தில் தரைத்தோற்ற அம்சங்களை காட்ட பயன்படுவது எது?
(புள்ளி 1)

2. கீழே காட்டப்பட்டுள்ள பண்புகளுள் 1: 50000 மெற்றிக் தேசப்படத்தில் காணக்கூடிய தரைத்தோற்ற அம்சங்களை மட்டும் எழுதுக.
( கணவாய், நெல்வயல், நீர்பாசன கால்வாய், சமநிலம், கரை, கூம்புக்குன்று, குளம், பள்ளத்தாக்கு)
(புள்ளி 4)

3. இலங்கையின் கரையோரத்தில் மட்டும் காணக்கூடிய தரைத்தோற்ற அம்சங்கள் மூன்றினை குறிப்பிட்டு உதாரணத்துடன் விளக்குக. (புள்ளி 6)